**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.பா.அருண் (த/பெ. (லேட்) திரு.பாலகிருஷ்ணன்) தட்டச்சர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி2) துறை**

அரசாணை (2ப) எண்.66

நாள்: 26.05.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, வைகாசி – 13

**படிக்க :–**

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. குடும்ப நல இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.4572/குந/நி1/2019, நாள். 06.09.2019.

******

**ஆணை:-**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட குடும்ப நல இயக்குநர் கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட விரிவாக்க கல்வியாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது திரு.பாலகிருஷ்ணன் என்பவர் 29.12.2016ல் பணியிடையே மரணமடைந்தார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 17.11.1960 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.11.2018 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மகன் திரு.பா.அருண் என்பவர் தனக்குப் பணிநியமனம் வேண்டி 17.02.2017 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 08.01.1989 என்றும், திரு.பா.அருண் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி தட்டச்சராக 15.11.2017 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாளான 15.11.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. குடும்ப நல இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, திரு.பா.அருண், தட்டச்சர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 15.11.2017 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.எண்.25642/க்யூ1/2019–1, நாள் 05.03.2020 மற்றும் அ.சா.எண்.8607/ஜி2/2020, நாள் 09.03.2020–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பீலா ராஜேஷ்,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**

குடும்ப நல இயக்குநர், சென்னை–600 006.
திரு. திரு.பா.அருண், தட்டச்சர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–600 018.

**நகல்**

தொழிலாளர்மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

29/05/2020
**பிரிவு அலுவலர்**

ந.க.எண்.265/நி/2020

மாவட்ட குடும்ப நல செயலகம்
தஞ்சாவூர். நாள்: 17.8.2020

பொருள்: பணிவரன்முறை ஆணை - வழங்கியது - தொடர்பாக

பார்வை: அரசாணை (2ப) எண்.66 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை நாள்: 26.05.2020

-*-

பார்வையில் காணும் அரசாணை தனியருக்கு அசல் நகல் வழங்கப்படுகிறது. அதனை நகல் (ஐஎம்டி) பணிப்பதிவேட்டில் ஒட்டப்படுகிறது.

17/8

துணை இயக்குநர்
மருத்துவம் ஊரக நலப் பணிகள்
மற்றும் குடும்ப நலம்,
தஞ்சாவூர்.
17.8.2020

பெறுநர்
திரு.பா.அருண், தட்டச்சர்
மாவட்ட குடும்ப நல செயலகம்
தஞ்சாவூர்.